



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## அருள் மொழிகள்




குரு என்பவர் யார் என்ற கேள்வி தோன்றுகிறது. அதாவது குரு என்பவர் எல்லா தர்மங்களையும் கரைத்துக் குடித்தவரும் தன் சீடனின் நல் வாழ்வில் ஈடுபட்டவருமாவர் என்ற பதில் கிடைக்கிறது.

ஒரு குருவின் இந்த குணம் ஸ்ரீசங்கர பகவத்பாதரிடம் முழுமையாக காணப்பட்டிருந்தது. அவருக்கு எல்லா சாஸ்திரங்களின் மறைந்துள்ள தத்துவங்களும் தெரியும். அவர் முழுமனித வம்சத்தின் நன்மைக்காக பாடுபட்டார். அநேக நூற்றாண்டுகள் கழிந்த பின்பும், அவர் அருளிய உறைகள் வேதங்களுக்கு வழிகாட்டும் விளக்காக பிரகாசிக்கின்றன.


—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ  தீர்த்த மஹா ஸ்வாமிகள்

## நீதிசதகம்


लभेत सिकतासु तैलं अपि यत्नतः पीडयन् पिबेत् च मृगतृष्णिकासु सलिलं पिपासा अर्दितः ।
कदाचिदपि पर्यटन शशविषाणं आसादयेत् न तु प्रतिनिविष्ट मूर्खजन चित्तं आराधयेत् ||

கடும் முயற்சியால் மணலிலிருந்து கூட எண்ணை எடுத்துவிடலாம். தாகத்தால் பீடிக்கப்பட்டவன் கானல் நீரைக் கூடப் பருகி தாகசாந்தி பெறலாம். அலைந்து திரிந்து எப்பொழுதாவது ஒரு சமயம் முயல் கொம்பு கூட சேகரிக்கக் கூடும். ஆனால், தீய செயல்களில் ஊறியவனை நல்வழிப்படுத்த முயல்வது அனர்த்தம் விளைவிக்கும்.


Our Mail ID : Info@voiceofjagadguru.com



# Voice of Jagadguru



advaitam paramanandam

an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## விதுர நீதி

चत्वारि कर्माण्यभयङ्कराणि भयं प्रयच्छन्त्य यथा कृतानि |
मानाग्निहोत्रमुत मानमौनं मानेनाधीतमुत मानयज्ञः ||40||

சத்வாரி கர்மாண்யப4யங்கராணி ப4யம்' ப்ரயச்ச2ந்த்ய யதா2 க்ரு'தானி |
மாநாக்3னிஹோத்ரமுத மானமௌனம்' மானேனாதீ4தமுத மானயஜ்ஞ: ||40||



அக்னிஹோத்ரம், மௌனம், அத்'யயனம், யக்ஞம் இந்த நான்கு கர்மாக்களும் அபியத்தை அளிக்கக் கூடியன. அவைகள் வேறு விதமாக கௌரவத்திற்காகச் செய்யப்பட்டால் பயத்தை அளிக்கின்றன.

पञ्चाग्नयो मनुष्येण परिचर्याः प्रयत्नतः |
पितामाताऽग्निरात्मा च गुरुश्च भरतर्षभ ||41||

பஞ்சாக்3னயோ மனுஷ்யேண பரிசர்யா: ப்ரயத்னத: |
பிதாமாதா(அ)க்3நிராத்மா ச கு3ருஶ்ச ப4ரதர்ஷப4 ||41||


தந்தை, தாய், அக்னி, ஆத்மா, குரு, அக்னிக்கு ஒப்பான இவ்வைந்து பேர்களையும் மனிதன் முயற்சியுடன் ஆராதிக்க வேண்டும்.

पञ्चैव पूजयल्लोके यशः प्राप्नोति केवलम् |
देवान् पितॄन् मनुष्यांश्च भिक्षून्यतिथिपञ्चमान्||४२

பஞ்சைவ பூஜயல்லோகே யஶ: ப்ராப்னோதி கேவலம் |
தே3வான் பித்ரு'ன் மனுஷ்யாம்'ஶ்ச பி4க்ஷூன்யதிதி2பஞ்சமான்..42

உலகில் தேவர்கள், பித்ருக்கள், மனுஷ்யர்கள், யதிகள் அதி'திர்கள், ஆகிய இந்த ஐந்து வகையார்களையும் பூஜிப்பவன் இவ்வுலகில் மிகப் புகழை அடைவான்.


(தொடரும்....)



Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்


(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)

## தவறுகளின் மூல காரணம்


நம் நாட்டில் பற்பல மஹான்களும் பாகவோத்தமர்களும் இருந்தார்கள். அவர்கள் அனைவருமே பணக்காரர்களில்லை. ஆயினும் திருப்தியாகவும் சந்தோஷமாகவும் வாழ்க்கையை நடத்தினார்கள். அவர்கள் அனைவருமே பகவானைத் திடமாக நம்பினார்கள். அவர்களது ஈச்வர விசுவாஸம் இமாலயத்தை விடவும் திடமாக இருந்தது. (எடுத்துக்காட்டாக) அப்பய்ய தீக்ஷிதர் வாழ்க்கையில் ஒரு சம்பவம் நடந்தது. அவர் ஒருமுறை அரச சபைக்குச் சென்று சாஸ்திர விளக்கம் செய்தார். அவரது புலமையால் பெரிதும் கவரப்பட்ட அரசன் அவருக்கு மிக விலையுயர்ந்த சால்வையொன்றை பரிசாக அளித்தான். இல்லம் திரும்பிய தீக்ஷிதர் அச்சால்வையை தமது அக்னிஹோத்ர குண்டத்தில் இட்டு விட, அதை அறிந்த அரசன் மிகுந்த கோபங்கொண்டு தீக்ஷிதரிடம் அவரது செய்கைக்கான காரணத்தைக் கேட்க, அவர், "தங்களது சிரேயஸ்ஸைக் கருதியே அவ்வாறு செய்தேன்" எனப் பதிலளித்தார். ஒன்றும் புரியாத அந்த அரசன், “சால்வையை நெருப்பில் இடுவது எனக்கு எப்படி சிரேயஸ்ஸைத் தரும்?" எனக் கோபமாகக் கேட்க, இவர், “அது நெருப்பில் பஸ்மமாகவில்லை. சிதம்பரம் நடராஜரின் உடலை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது" என்றார். இவரது வார்த்தைகளில் நம்பிக்கை வராத அந்த அரசன் சிதம்பரம் கோயிலில் சென்று பார்த்தபொழுது தான் அளித்த அதே சால்வை பகவானின் மேனியை அலங்கரித்துக் கொண்டிருப்பதைக் கண்டு வியந்து போனான். எப்பேற்பட்ட ஈச்வர விசுவாஸம் இருந்தால் இது நடந்திருக்க முடியும்! ஆகவே, மஹான்களும் பக்தர்களும் தங்களுக்கு வேண்டியதை ஈச்வரன் பார்த்துக் கொள்வான் என்னும் தீர்மானத்துடன் திருப்தியாக வாழ்ந்தனர். பணத்தில் பேராசை கொள்ளவில்லை.



ஆகவே பணக்காரனாக இருந்தால்தான் சந்தோஷம் என்பதில்லை. எப்படிப்பட்ட நிலையிலும் சுகமாக இருக்கலாம். இந்த தத்துவத்தை மறந்தோமானால் அதர்மங்களும் அநியாயங்களும் அதிகரிக்கும். மாறாக, “பொன்”னில் இருக்கும் மோஹத்தை நாம் நீக்கி விட்டோமானால் திருப்தியும் சந்தோஷமுமான ஜீவிதம் நமக்கு உண்டாகும்.



# Voice of Jagadguru



advaitam paramanandam | an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஹர நம: பார்வதி பதயே ; |ஹர ஹர மஹாதேவ || ஜானக்காந்தஸ்மரணம் | ஜய ஜய ராம ராம ||


## திருப்தி உடையவனே பாக்கியசாலி


யஸ்யேச்சயைவ புவனானி ஸமுத்பவந்தி
திஷ்டந்தி யாந்தி ச புனர்விலயம் யுகாந்தே |
தஸ்மை ஸமஸ்தபலபோகநிபந்தனாய
நித்யப்ரபுத்தமுதிதாய நம: சிவாய!!



எதை ஜனங்கள் வெறுக்கிறார்கள்? "தாரித்ர்யம்" என்பதே அது. தான் ஒரு தரித்ரனாக இருப்பதை எவனும் விரும்புவதில்லை. பின், எது 'தாரித்ர்யம்' எனப்படுகிறது? யார்தான் தரித்ரன்? எவனிடம் செல்வம் இருக்கிறதோ அவன் தரித்ரன் அல்ல என்பதும் எவனிடம் செல்வம் இல்லையோ அவன் தரித்ரன் என்பதும் சாதாரணமாக இருக்கக்கூடிய ஓர் அபிப்ராயம். ஆனால், ஆராய்ந்து பார்த்தால் தாரித்ர்யத்திற்கும் செல்வத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை என்று தெரியும். யாருக்கு ஆசைகள் இருக்கின்றனவோ அவன் தரித்ரன். ஆசைகள் இல்லாதவனே பாக்கியசாலி. இதுதான் தாரித்ர்யம் பற்றிய உண்மையான கருத்து. ஒரு ரூபாய் வைத்துக் கொண்டிருக்கும் மனிதன் ஒருவனை எடுத்துக் கொள்ளுங்கள். தனக்கு நூறு ரூபாய் கிடைத்தால் தான் பாக்கியசாலி என்றும், பிறகு நன்கு வாழ்க்கை நடத்த முடியும் என்றும் அந்த மனிதன் கூறுவான். நூறு ரூபாய் வைத்துக் கொண்டிருப்பவன், ஆயிரம் ரூபாய் தேவை என்று எண்ணுவான். அதேபோல் ஆயிரம் ரூபாய் வைத்திருப்பவன் ஒரு இலட்சம் ரூபாய் தேவை என்றும் இலட்சாதிபதியாக இருப்பவன் தனக்குக் கோடி ரூபாய் தேவை என்றும் கருதுவான். ஆகவே செல்வமே இல்லாதவன்தான் தரித்ரன் என்று சொல்வது சரியாகாது.

(தொடரும் .....)





ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ ஸூக்தம்

வேதங்களிலும் புராணங்களிலும் காணப்படுகின்ற மகாலட்சுமி துதிகளின் தொகுப்பே ஸ்ரீஸூக்தம். இது தென்னாட்டில் மிகவும் பிரபலமானது. இதனைப் பாராயணம் செய்வது மகாலட்சுமியின் பரிபூரண அருளைப் பெற்றுத் தரும் என்பது நம்பிக்கை.



1. அக்கினி தேவனே, பொன் நிறத்தவளும், பாவங்களைப் போக்குபவளும், பொன் வெள்ளி மாலைகளை அணிந்தவளும் நிலவு போன்றவளும், பொன்மயமானவளுமான மகாலட்சுமியை என்னிடம் எழுந்தருளச் செய்வாய்

2. அக்கினிதேவனே, யாருடைய அருளால் நான் பொன்னையும் பசுக்களையும் குதிரைகளையும் உறவினரையும் பெறுவேனோ, அந்த மகாலட்சுமியை என்னிடம் எழுந்தருளச் செய்வாய், அவள் என்னிடமிருந்து விலகாதிருக்கச் செய்வாய்!

3. முன்னால் குதிரைகள் நடுவில் ரதங்கள் புடைசூழ வருபவளும், யானைகளின் ஒலியைத் தன் வரவின் அறிகுறியாகக் கொண்டவளுமான ஸ்ரீதேவியை அழைக்கிறேன். திருமகளே, நீ என்னிடம் மகிழ்ந்து உறைவாய்!

4. புன்முறுவம் தவழ்பவளும், பொன்கோட்டையில் உறை பவளும், கருணை நிறைந்தவளும், ஒளி பொருந்தியவளும் மகிழ்ச்சி நிறைக்தவளும், மகிழ்ச்சியைக் தருபவளும், தாமரையில் வீற்றிருப்பவளும், தாமரை நிறத்தவளும் ஆனவள் யாரோ அந்தத் திருமகளை இங்கே எழுந்தருளுமாறு பிரார்த்திக்கிறேன்!

5. சந்திரனைப் போன்றவளும், ஒளிமிக்கவளும், தன் மகிமையால் சுடர்விட்டுப் பிரகாசிப்பவளும், தேவர்களால் வழிபடப் பெறுபவளும் கருணை மிக்கவளும், தாமரையைத் தாங்கியவளும், ஈம் என்ற பீஜமந்திரத்தின் பொருளாகத் திகழ்பவளுமான அந்த மகாலட்சுமியை நான் சரணடைகிறேன். தேவியே உன்னை வேண்டுகிறேன்- எனது வறுமை விலகுமாறு அருள்வாய்!

(தொடரும்....)

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)


## என்றும் புதியவர்

ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

## 1. பகுத்தறிவு (விவேகம்)

பிரம்ம ஞானமே முழுமையான விவேகம்

மேலே கூறிய சுலோகத்திற்கு ஆசார்யாள் தமது அருளுரை ஒன்றில் மிக விரிவாகப் பொருள் கூறியுள்ளார். அதிலிருந்து சில பகுதிகளைக் கீழே தருகிறோம்:



"... நாமும் ஆத்மாவைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறோம். எவ்வாறு தெரிந்து கொண்டிருக்கிறோம்? முட்டாளானவன் "நான் உடல் தான்` என்று எண்ணுகிறான். சாஸ்திரம் கற்றவன் உடலிலும் ஜீவனிலும் சேர்த்து 'நான்' என்ற பாவனையைக் கொண்டுள்ளான் என்று விவேக சூடாமணியில் கூறப்பட்டுள்ளது. சிலர் 'தேஹமே நான்' என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். 'தேஹமே நான்' என்று நினைத்து விட்டால் நாம் செய்யும் ஸந்த்யாவந்தனம் போன்றவை எதற்காக? ஸந்த்யாவந்தனம், தேவ பூஜை இவையெல்லாம் இந்த தேஹம் இருக்கும் பொழுதே பலன்களைக் கொடுத்துவிடும் என்று கூறமுடியாது. அப்படியிருக்கையில் நாம் செய்யும் தேவ பூஜைக்கும் ஸந்த்யாவந்தனத்திற்கும் என்ன பயன்? நாம் செய்யும் யக்ஞங்களுக்கெல்லாம் என்ன பயன்? ஆகவே 'தேஹமே நான்' என்று கூறிவிட்டால் இவைகளுக்கெல்லாம் பயனே இல்லாமல் போய்விடும்.

சிலரோ இந்த உடலிலும் ஜீவனிலும் சேர்த்து 'நான்' என்ற பாவனையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தர்க்க சாஸ்திரத்திலும் அறிவு இருக்கலாம். மீமாம்ஸா சாஸ்திரத்திலும் அறிவு இருக்கலாம். அவர்கள் இந்த தேஹத்திலும், சைதன்யத்திலும் சேர்த்து 'நான்' என்ற பாவனையை வைத்துக்

கொண்டிருப்பார்கள். அவர்கள், தேஹத்துடன் சைதன்யம் கலந்து ஏதாவது வேலை செய்ய முடியுமே தவிர வெறும் தேஹம் ஏதாவது செய்ய முடியுமோ" அது ஒன்றும் வேலை செய்ய முடியாது. குணங்களும் உருவமுமற்ற சைதன்யம் தனியே ஏதாவது செய்ய முடியுமோ? மேலும் சைதன்யத்திற்கு எதுவும் செய்தாக வேண்டியதில்லை. இப்படியிருக்கும் பொழுது, பயன்களை எல்லாம் அனுபவிப்பது 'தேஹத்தில் அபிமானம் வைத்துள்ள சைதன்யமே ஆகும்' என்று கூறுவர்….

விவேகத்தினால் ஏற்பட்ட அறிவுள்ள மஹாத்மாவானவர் தன்னை எப்போதுமே 'நான் பரம்பொருள்' என்று சிந்தித்துக் கொள்கிறார். முதலில் சொல்லப்பட்டது போல இந்த உடல் தான் 'நான்' என்றால் அதுவும் தவறான அறிவு. அவ்வாறில்லாமல், இந்த உடலும் சைதன்யமும் சேர்ந்தது தான் 'நான்' என்றால் அதுவும் முழுமையாகச் சரியானது அல்ல. சச்சிதானந்த ஸ்வரூபமானவனே நான் என்பதே சரியான அறிவு. ஆனால் விவேக விக்ஞானம் (பகுத்தறிவு) ஏற்பட்டுள்ள மனிதனுக்கு எவ்வாறு இருக்கும் என்றால், நிலையான ஆத்மாவினிடத்தில் நான் தான் பரம்பொருள்'. அதாவது 'நான் பரம்பொருள்' என்று தன்னைப் பற்றியே எப்போதும் கருதுவது என்று கூறப்பட்டுள்ளது…..

இதிலிருந்து, "விவேகி" என்ற சொல்லின் உயர்ந்த பொருள், "ஆத்மாவை அறிந்தவர்" என்று புரிகிறது. அதாவது, ஆத்ம ஞானம் பெற விரும்புவன் முதலில் "உலகம் அநித்யம்: ஆத்மாவாகிய பிரம்மம் மட்டுமே நித்யம்" என்ற உண்மையை முயற்சி செய்து மனதில் நிறுத்துகிறான். இதன் காரணமாக அவன் புலன்கள் அடங்கி, மனமும் ஆத்மாவை நோக்கி உள்வாங்குகிறது. "நான் ஆத்மா/பிரம்மம்" என்பதை அவன் தெளிவுற உணர்ந்த பின், எந்த விவேகத்தை அவன் மனதில் முன்னர் முயற்சியின் துணையுடன் நிறுத்தினானோ, அது முழுமை அடைந்து அவனுடைய இயல்பு ஆகிறது. இதை பகவத்பாதர், "முழுமையான விவேகம்" என்று விவேக சூடாமணியில் குறிப்பிடுகிறார்….

सम्यग्विवेकः स्फुटबोधजन्यो विभज्य दृग्दृश्यपदार्थतत्त्वम् । छिनत्ति मायाकृतमोहबन्धं यस्माद्विमुक्तस्य पुनर्न संसृतिः ॥

(தெளிவான ஞானத்தினின்று பிறக்கும் முழுமையான விவேகம் பார்ப்பவனுக்கும் (ஆத்மா) பார்க்கப் படுபவைக்கும் (ஆத்மா அல்லாதவை) உள்ள வேறுபாட்டை நன்கு பாகுபடுத்தி, மாயையினால் உண்டான மோஹம் எனும் பந்தத்தை அறுக்கிறது; இதனால் ஞானி பிறப்பிறப்புச் சுழற்சியிலிருந்து விடுபடுகிறான்.) இதில் "सम्यग्विवेकः स्फुटबोधजन्यः" என்ற சொற்றொடரை ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதி மஹாஸ்வாமிகள் எப்படி விளக்கியுள்ளார் என்பதைப் பார்ப்போம்: (தொடரும்…..) மிக்க நன்றி : Centre for Brahmavidya

# நீதி மஞ்ஜரீ

## ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்தியாயம் - 3
### இல்லற தர்மம்

यदा यदा ही कौसल्या  दासीवच्च सखीव च ॥
भार्यावत् भगिनीवच्च मातृवच्चोपतिष्ठति ।

இவ்விதம் சுசுரூஷை செய்வதே பெரிய தபஸ் ஆகிறபடியால் தானாகவே ஸித்திகளும்கூட ஏற்படுமென்று தெரிகிறது. கௌசிகர் என்பவர் காட்டில் தபஸ் செய்யும்போது மேலேயிருந்து கொக்கு எச்சமிட்டதை கோபத்துடன் நிமிர்ந்து பார்த்தவுடன் அது எரிந்து கீழே விழுந்துவிட்டது. பிறகு இவர் கிராமத்தில் பிக்ஷைக்குப்போன ஸமயம் ஒரு வீட்டில் கொஞ்சம் தாமஸித்துப் பிக்ஷை வந்ததினால் கோபமடைந்து அந்த வீட்டுப் பெண்மணியை நிமிர்ந்து பார்க்க அவள் உடனே "நான் கொக்கு அல்ல" என்று சொன்னாள். அதைக் கேட்டு ஆச்சர்யப்பட்டு "உனக்கு எப்படி தெரிந்தது?" என்று இவர் கேட்டதற்கு அவள் "எனக்கு எவ்வித யோக்யதையும் கிடையாது. பர்த்தாவிற்குப் போஜனம் செய்வித்துக்கொண்டிருந்தேன். அதினால்தான் தங்களுக்குப் பிக்ஷை கொண்டுவர தாமதம். எனக்கு பர்த்தாவுக்கு சுசுருஷையைத் தவிர வேறு எதுவும் தெரியாது" என்று சொன்னாள் என்ற விருத்தாந்தம் யாரும் அறிந்ததே.

இரண்டு ஸஹோதரிகளில் மூத்தவள் குடும்ப வாழ்க்கையில் இஷ்டப்படாமல் காட்டுக்குப்போய் தபஸ் செய்து கொண்டிருந்தாள். ஒருநாள் அவள் ஏகாக்கிரமாய் தன்னை மறந்து நிஷ்டையிலிருக்கும்போது காட்டில் தீப்பிடித்து இவள் ஸமீபத்தில் வந்துவிட்டது. இவள் நிஷ்டை கலைந்து பார்க்கும்போது நான்கு பக்கங்களிலும் தீ சூழ்ந்திருப்பதைக்கண்டு தப்பிக்க வழி தெரியாமல் தவித்தாள். அப்பொழுது இவள் எதிர்பாராமல் எங்கிருந்தோ மேகங்கள் ஏற்பட்டு பலமான மழை பெய்து இவளைச் சுற்றியிருந்த அக்னியை அணைத்தது. மழை ஏற்படுவதற்கு நிமித்தமே தெரியவில்லை. அந்த ஸமயம் அவள் தங்கை தன்னுடைய பர்த்தாவிற்கு அன்னமிட்டுகொண்டிருந்தாள். திடீரென்று ஒரு சொம்பு ஜலத்தை எரிகிற அடுப்பில் கொட்டினாள். எரிகிற அக்னியில் ஜலம் விடுவது மிகவும் தோஷம். அதுவும் சாப்பிடும்போது தீயை அணைப்பது இன்னமும் தோஷம். இவ்விதம் தோஷமான கார்யத்தை அவள் செய்ததைப் பார்த்த பர்த்தா "நீ நன்கு ஆசாரம் தெரிந்தவளே, ஏன் இவ்விதம் செய்தாய்?" என்று கேட்டார். "ஆபத்திற்குப் பாதகமில்லையென்று செய்தேன். என் தமக்கை காட்டில் தபஸ் செய்துகொண்டிருக்கிறாள். காட்டுத்தீ அவளைச் சுற்றிக்கொண்டது. அதை அணைத்தேன்" என்றாள். “காட்டில் நடப்பது உனக்கு எப்படி தெரியும்?" என்று

கேட்டதற்கு "தங்கள் பாதாரவிந்த சுசுரூஷாபலத்தினால் என் மனதில் தட்டுப்பட்டது" என்றாள். உடனே பர்த்தாவும் பத்னி ஸஹிதம் காட்டுக்குப் போய் பார்க்கையில், காட்டுத்தீ அணைந்திருப்பதைக் கண்டார்கள். தமக்கையும் தன தபஸினால் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியாமலிருக்கையில் தங்கை காப்பாற்றிக் கொடுத்ததையுணர்ந்து தபஸைவிட இல்லற தர்மமே மேலானதென்று தீர்மானித்து மறுபடியும் குடும்ப வாழ்க்கையிலேயே ஈடுபட்டு நற்கதியடைந்தாள்.

இவ்வித உதாஹரணங்கள் புராணங்களிலும் முன்னோர்களின் சரித்திரங்களிலும் இப்பொழுது ஏற்படும் ஸம்பவங்களிலும் பல காணலாம்.

இவ்விதமாக இளைஞர்களுக்கு அவர்கள் நடந்துவர் வேண்டிய தர்மத்தை எடுத்துச் சொல்லி அவர்களை ஸன்மார்க்கத்திலிருந்து நழுவாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு, தமக்கு இருந்துவருவதை அறிந்து பெற்றோர்களும், பெரியோர்களும் நன்கு வஹித்து வந்தார்களேயானால் வாழ்க்கையில் எவ்வித இடுக்கண்ணுமிராமல் ஸுகமாக ஐஹிக் போகங்களை அனுபவித்துக் கொண்டு, மறுமைக்கு வேண்டிய ஸாதனங்களையும் கையாளுவதற்குள்ள ஸௌகர்யங்கள் ஏற்படும். பெரியோர்கள் இப்பொறுப்பை வஹிக்காமலும், பெரியோர்களின் வார்த்தைக்கு வாலிபர்கள் மதிப்புக் கொடுக்காமலும் இருந்துவிட்டால் அதனால் ஏற்படும் தீங்கு அவர்கள் ஸம்பந்தப்பட்ட குடும்பங்களை மாத்திரம் பாதிக்கும் என்பதில்லை, ஜனஸமூஹத்தையே பாதித்துவிடுமென்பதில் ஸந்தேஹமில்லை. ஆகையால் ஆஸ்திகர் யாவரும் தங்களால் கூடியமட்டும் சாஸ்திரத்தையும் ஸம்பிரதாயத்தையும் அனுஸரித்து ஆசாரத்தையும் தர்மத்தையும் அனுஷ்டித்தும் போதித்தும் வருவதே முறையாகும்.

(தொடரும் ...) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி

## ||श्रीशारदास्तोत्रम्||

### श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

### ஸ்ரீஶாரதா³ஸ்தோத்ரம்

### (ஸ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

(ஸ்ரீ சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது) அடுத்த இதழில் தொடரும்

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸ்ரீமத் வால்மீகி ராமாயண மாஹாத்ம்யம்

## (வால்மீகி ராமாயணத்தின் சிறப்பு)

(ஸ்ரீ ஸ்கந்தபுராணம் உத்தரகண்டத்தில் நாரதர்-ஸநத்குமாரரிடையே நடந்த உரையாடல்)

### அத்தியாயம் : ஐந்து
### இராமாயணத்தை ஒன்பது நாட்கள் கேட்கும் விதிமுறை: மகிமை மற்றும் பலன்களின் விவரம்

நாரதர் கூறுகிறார்- நாள்தோறும் (படுக்கையிலிருந்து எழுந்ததும்) நாயுருவிக் குச்சியால் பல்துலக்க வேண்டும்; இராமபக்தியில் திளைத்தவளாக, அறநூல்களில் கூறப்பட்டுள்ள முறைப்படி நீராடவேண்டும். தன் புலன்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்து உறவினர்களோடு கூட இராமாயணத்தைக் கேட்க வேண்டும், குல ஆசாரப்படி வாய் துலக்கி, (நீர்நிலையில்) நீராடி, தூய வெண்மை ஆடை அணிந்து கொண்டு மௌனமாக வீட்டிற்கு வரவேண்டும். பின்னர், கால்களை நீரால் கழுவிக் கொண்டு, ஆசமனம் செய்து சாட்சாத் நாராயணனை ஸ்மரிக்கவேண்டும், பிறகு, வழக்கமாகச் செய்துவரும் தேவபூஜையைச் செய்து, பக்தியுணர்வுடன் சங்கல்பம் செய்துகொண்டு இராமாயணப் புத்தகத்தை மலர்கொண்டு அர்ச்சிக்க வேண்டும்.

"இராமாயண கதையைக் கேட்டல்' என்ற விரதத்தை மேற்கொள்பவன், பக்தியில் மூழ்கி, ஓம் நமோ நாராயணாய' என்ற மந்திரத்தைக் கூறி, ஆவாஹன-ஆனை- சுந்த-புஷ்ப உபசாரங்களைச் செய்ய வேண்டும். தான் செய்த எல்லாப் பாவங்களும் நீங்க வேண்டும் பொருட்டு. தன் சக்திக்கேற்றபடி, ஒரு தடவை, அல்லது இரண்டு-மூன்று தடவைகள் மனப்பூர்வமாக ஹோமம் செய்ய வேண்டும். இவ்வாறு, புலன்களை அடக்கி, விதிக்கப்பட்ட முறையில் இராமாயணம் படிப்பது-கேட்பது என்ற புனிதச்செயலைச் செய்பவன், எந்த உத்தமலோகத்தை அடைந்தபின், ஒரு ஜீவன் மீண்டும் மண்ணுலகத்திற்குத் திரும்பி வருவதில்லையோ, அந்தப் பரம்பதத்தை (பகவான் விஷ்ணுவின் ஸ்தானத்தை)க் சென்றடைகிறான் .

(எவ்வளவு தாழ்ந்தவனாக இருந்தாலும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டால் அவனுக்கு உணவு உடை கொடுக்க வேண்டும் என்பது பொது தருமமாக இருந்தபோதிலும்) ராமாயணம் படிப்பது.-கேட்பது என்ற விரதத்தை மேற்கொண்டயன், சண்டாளர்களுக்கும், இழிநிலை: அடைத்தவர்களுக்கும் உணவு-உடை தாளம் செய்யலாகாது. நாத்திகள். அறம் வழுவியயன், பிறரை நிந்திப்பவன் கருமி ஆகியோருடன் இராமாயண விரதத்தை ஏற்றிருப்பவன் பேச்சு வார்த்தைகூட வைத்துக் கொள்ளக்கூடாது.

ஒரு தாய்க்கு அவளுடைய சொந்தக் கணவன் இருக்கும்போது, வேறொரு ஆடவன் மூலம் பெற்றுக் கொண்ட மகவு: இசையைத் தொழிலாகக் கொண்டவன், தேவதைகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு ஜீவிப்பவனின்

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

அன்னத்தை உட்கொள்பலன்: வைத்தியன்: நரஸ்துதி செய்து கவிதை எழுதுபவன்; தெய்வம் அந்தணர்க்குப் பகைவன் பிறர் வீட்டில் உணவு கொள்ள பேராசைப்படுபலன்: பிற பெண்டிர்களிடம் மனத்தைப் பறிகொடுத்தவன் ஆகிய இவர்களுடன் இராமாயண விரதத்தை அனுஷ்டிப்பவன் ஒரு சொல் கூடப் பேசக் கூடாது.



இம்மாதிரியான நியமங்களைத் தவறாமல் கடைப்பிடித்து மனத்தூய்மை பெற்று, புலன்களை வென்று, எவ்லாப் பிராணிகளின் நலனை விரும்புகிறவனாக, இராமாயணத்தில் மூழ்கித் திளைப்பவன் மிக உயர்ந்த நிலையை அடைகிறான். கங்கைக்கு நிகரான புண்ணிய தீர்த்தம் இல்லை: தாய்க்கு நிகரான குரு இல்லை: விஷ்ணுவுக்கு நிகரான தெய்வம் இல்லை. இராமாயணத்தைக் காட்டிலும் உயர்ந்த நூல் எதுவும் இல்லை; மறைகளுக்கு நிகரான சாத்திரங்கள் இல்லை; மன அமைதிக்கு நிகரான சுகம் இல்லை; சாந்தியைக் காட்டிலும் மேலான (அறிவு) ஒளி இல்லை; இராமாயணத்தைக் காட்டிலும் உயர்வான காவியம் இல்லவேயில்லை; பொறுமைக்கு நிகரான பலம் இல்லை; புகழுக்கு நிகரான செல்வம் இல்லை: மெய்ஞானத்திற்கு நிகராகப் பெறத்தக்கது. இல்லை, இராமாயணத்திற்கு மேலாக வேறொரு வஸ்து இல்லை. இராமாயனக் கதைப்பொழிவு நிறைவடைந்ததும், வேதவிற்பன்னரான சொற்பொழிவாளருக்கு தட்சிணையோடுகூட பசுவை தானம் செய்ய வேண்டும்! இராமாயண் புத்தகத்தையும், ஆடை- அணிகனைகளையும் சமர்ப்பிக்க வேண்டும்.

இராமாயணக் கதையைச் சொன்னவருக்கு இராமாயண புத்தகத்தை அளிப்பவன், பரமபதத்தை அடைந்து சோகமில்லாப் பெருவாழ்வை அடைகிறான். அறத்தை அறிந்தவர்களுள் சிறந்தவரே ஒன்பது நாட்கள் இராமாயணத்தைக் கேட்பதால் ஏற்படும் பலன்களைக் கேளுங்கள்— இராமாயணத்தைப் பஞ்சமியில் தொடங்கிக் கேட்க வேண்டும். அவ்விதம் கேட்பவன் எல்லாப் பாவங்களிலிருந்தும் உடனே விடுபடுகிறான். இரண்டு தடவைகள் இராமாயணக் கதையைக் கேட்பவனுக்கு, புண்டரீகயக்ஞும் செய்த பலன் கிடைக்கிறது.

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

புலன்களை வென்று, விரத நியமங்களை கைக்கொண்டு இராமாயணத்தைக் கேட்பவனுக்கு அசுவமேத யாகத்தின் இரு மடங்கு பலன்கள் கிடைக்கின்றன.

மகாபாக்கியசாலியான எவன், ஐந்து தடவைகள் :இராமாயணத்தைக் கேட்பது என்ற விரதத்தைச் செய்து முடிக்கிறானோ அவன் அத்யக்னிஷ்டோமம் என்ற யாகத்தின் இரு மடங்கு பலன்களை பெறுகிறான். இந்த விரதத்தை, ஒருமைப்பட்ட மனத்துடன் ஆறு தடவை செய்து முடிப்பவன். எண் மடங்கு அக்னிஷ்டோம யாக பலனை அடைகிறான்

மாமுனிவர்களே எந்த ஒரு பெண்ணோ ஆணோ எட்டுத் தடவை இராமாயணத்தைக் கேட்டால், நரமேதம் என்ற யாகத்தில் ஐந்து மடங்கு பலனை அடைகிறார்கள். ஒரு பெண் அல்லது ஆண், இராமாயண விரதத்தை ஒன்பது தடவைகள் செய்து முடித்துவிட்டால், அவர்கள் கோமேதம் என்ற வேள்வியைச் செய்த மும்மடங்கு புண்ணியத்தைப் பெறுவார்கள்.

மனச்சாந்தியுடன் இராமாயணத்தைப் படிப்பது, கேட்பது என்ற வேள்வியைச் சிரத்தையுடன், புலன்களை அடக்கிச் செய்து முடிப்பவன் பேரானந்தமே நிறைந்த பரம்பதத்தை அடைகிறான். அங்கு சென்றுவிட்டவனுக்கு. (மீண்டும் மண்ணுலகப் பிறப்பு என்ற) துயரம் ஏற்படுவதில்லை. நாள்தோறும் இராமாயணத்தைப் படித்தல், கேட்டல் செய்பவன், கங்கையில் நீராடுவதை உறுதியாகக் கடைப்பிடிப்பவன் அறநெறிகளை எடுத்துக் கூறுபவன் - ஆகிய இவர்கள் சம்சாரக் கடலைக் கடந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. மகாத்மாக்களே! துறவிகள், பிரம்மசாரிகள், வீரர்கள்கூட, இராமாயணத்தை ஒன்பது நாட்களுக்குக் கேட்க வேண்டும்.

மிகுந்த பக்தியுடன் இராம கதையைக் கேட்பவன் ஞானவொளி பெற்று, பிரும்மலோகம் சென்று அங்கே பரமானந்தத்தில் திளைத்திருப்பான்; ஆகவே, அந்தனோத்தமாகளே இராமாயண கதையைக் கேளுங்கள். தெய்வீகக் கதைகளைக் கேட்க விரும்புவர்களால் கேட்கத் தகுந்த மிகச்சிறந்த கதை இதுவே. இதைக் காட்டிலும் புனிதமானது வேறொன்றுமில்லை.

(தொடரும்...)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்